**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே**

# அன்னைத் தமிழ்முற்றம் - 2022

இணையவழி நிகழ்வு - கொன்றைவேந்தன் - ஆண்டு 2

**காலம்: 08.01.22 அல்லது 09.01.22 - சனி 15.00 அல்லது ஞாயிறு 11.00**

எம்மால் வழங்கப்பட்ட கொன்றைவேந்தனில் குறைந்தது ஆறினை (6) ஒப்பித்தல் விரும்பத்தக்கது.

## கொன்றைவேந்தன்

1. **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

   *பொருள்: தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வங்கள்.*

2. **ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

   *பொருள்: கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.*

3. **இல்லறம் அல்லது நல்லறம் அன்று.**

   *பொருள்: இல்லறமே எல்லா அறங்களிலும் சிறந்தது.*

4. **ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.**

   *பொருள்: பிறருக்கு உதவி செய்யாதவர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்.*

5. **உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.**

   *பொருள்: குறைந்த அளவில் உணவை உண்பது பெண்களுக்கு அழகாகும்*

6. **ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**

   *பொருள்: ஊரோடு பகைத்து வாழ்பவன் தனது பரம்பரையுடன் அழிந்து விடுவான்.*

7. **எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.**

   *பொருள்: அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும் இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண்கள் போன்றவை.*

8. **ஏவா மக்கள் மூவா மருந்து.**

   *பொருள்: செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அமிர்தம் போன்றவர்கள்.*

9. **ஐயம் புகினும் செய்வன செய்.**

   *பொருள்: பிச்சை எடுக்கும் நிலையிலும் செய்யவேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்தல் வேண்டும்.*

10. **ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு.**

    *பொருள்: நற்குணமுடைய ஒருவரைத் துணையாகக் கொண்டு ஓரிடத்திலே எப்போதும் வாழ்.*

11. **ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.**

    *பொருள்: ஒழுக்கமானது வேதம் ஓதுவதை விட மிகவும் நல்லது.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.

*பொருள்: பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்.*

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.

*பொருள்: சிக்கனமாயிருந்து தானியத்தையும் செல்வத்தையும் தேட வேண்டும்.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**